WEB COPY



IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED : 04.09.2025

CORAM

THE HONOURABLE MR.JUSTICE **M.SUNDAR**
and
THE HONOURABLE MR.JUSTICE **MUMMINENI SUDHEER KUMAR**

**W.P.No.33576 of 2025**
**and**
**W.M.P. No.37739 of 2025 in W.P. No.33576 of 2025**

M/s.Lanka Trading Private Limited
rep. By its Managing Director A.Ravi
106, G.N.T. Road,
Athipedu Village,
Jaganathapuram – 2
Athipedu Post,
Sholavaram Firka,
Ponneri Taluk,
Thiruvallur District. ... Petitioner

Vs.

1.The Tahsildar,
Office of the Tahsildar,
Ponneri, Thiruvallur District.

2.The District Collector,
Thiruvallur District. ... Respondents

(R2 impleaded suo motu vide order
dated 04.09.2025 in W.P.No.33576 of 2025
and W.M.P.No.37739 of 2025)



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



Writ Petition filed under Article 226 of The Constitution of India praying to issue a Writ of Certiorari to call for the records on the file of the respondent in his proceedings Na.Ka.No.1714/2025 A1 dated 14.08.2025 and quash the same.

| | | |
|---|---|---|
| For Petitioner | : | Mr.K.S.Gnanasambandan<br>for Mr.G.Nanthagopal |
| For Respondents | : | Mr.T.K.Saravanan,<br>Additional Government Pleader |

**ORDER**

[Order of the Court was made by **M.SUNDAR, J.**,]

Captioned main 'Writ Petition' (hereinafter 'WP' for the sake of brevity) has been filed with a prayer seeking issue of writ of certiorari qua an 'order dated 14.08.2025 bearing reference Na.Ka.No.1714/2025 A1 made by sole respondent' (hereinafter 'impugned order' for the sake of convenience and clarity).

2. Mr.K.S.Gnanasambandan, learned counsel representing Mr.G.Nanthagopal, learned counsel on record for writ petitioner is before us.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



3. Learned counsel for writ petitioner submits that the impugned order has been erroneously made by misapplying the provisions of 'The Tamil Nadu Land Encroachment Act, 1905 (Tamil Nadu Act III of 1905)' {hereinafter 'said 1905 Act' for the sake of brevity}.

4. Issue notice.

5. Mr.T.K.Saravanan, learned Additional Government Pleader, accepts notice for sole respondent and points out that even according to the writ petitioner, impugned order is appealable order, an appeal is available under Section 10 of said 1905 Act and more importantly, the writ petitioner has availed alternate remedy of appeal by filing an appeal dated 19.08.2025 and has also sought for stay. A scanned reproduction of the appeal petition as placed before us is as follows:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



40 19.08.2025

முன்னிலை:

**மாண்புமிகு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாக நடுவர் அவர்கள்**

**தமிழ்நாடு 1905-ஆம் ஆண்டின் 3-வது சட்டத்தைச் சேர்ந்த 7-வது பிரிவிற்கான பிரிவு 10(1) (A)-ன்படிக்கு மனுதாரரால் சமர்ப்பிக்கப்படும் மேல்முறையீடு**

**M/s.லங்கா டிரேடிங் பிரைவேட் லிமிடெட்,**
**(முன்பு அக்காய் ஆட்டோ ஸ்பிரிங் பிரைவேட் லிமிடெட்)**
Rep. by A.ரவி, இயக்குநர்- மேலாளர்,
எண்.106, G.N.T.ரோடு,
அத்திப்பேடு கிராமம், ஜெகநாதபுரம் - 2,
அத்திப்பேடு அஞ்சல், சோழவரம் குறுவட்டம்,
பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். ...**முறையீட்டாளர்**

**-எதிர்-**

**1.உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,**
பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
**2.திரு.வருவாய் ஆய்வாளர்,**
சோழவரம் குறுவட்டம், சோழவரம், பொன்னேரி வட்டம்.
**3.திரு.கிராம நிர்வாக அலுவலர்,**
அத்திப்பேடு கிராமம், பொன்னேரி வட்டம். ...**எதிரவர்கள்**
**4.திரு.ரவிச்சந்திரன்,**
த/பெ.முகுந்தன்,
அத்திப்பேடு கிராமம்.

**பிரிவு 10(1) (A)-ன்படிக்கு தமிழ்நாடு 1905-ஆம் ஆண்டின் 3-வது சட்டத்தைச் சேர்ந்த 7-வது பிரிவிற்கான காரண, காரிய விளக்கத்துடன் சமர்ப்பிக்கப்படும் முறையீடு**

**பொருள்:** 1.முதல்வரின் தனிப்பிரிவு மனு - பழைய கிராம நத்த புல எண்.117/1-க்கு ஏக்கர் 12.00 செண்ட் தவறான தகவல் தந்த ரவிச்சந்திரன் மனுவின்மீது எங்கள் காரண, காரிய விளக்கங்களை ஆராயாமல் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேல்முறையீடு.
2.திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் குறுவட்டம், ஜெகநாதபுரம்-2, அத்திப்பேடு கிராமம், நத்தம் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டதிற்கு முன்பு S.No.117-ல் அடங்கிய பல்வேறு நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராம நத்த மனைகள் குறித்து தற்போது புதிய புல எண்.477/1.

For LANKA TRADING PRIVATE LIMITED
Formerly Known as
AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



41

{2}

பார்வை: 1.ந.க.எண்.1714/2025/ஆ1, தேதி:14.08.2025 தவறான உத்தரவு.
2.ந.க.எண்.56/2025/ஆ1, தேதி:09.01.2025 வட்டாட்சியரின் குறிப்பாணை.
3.ந.க.எண்.1232/2023/ஆ1, தேதி: .07.2023 நில அளவை செய்ய ஆட்சேபணை மனு.
4.ந.க.எண்.17064/2006/ஆ1, தேதி:02.03.2006 வட்டாட்சியரின் அனுபவச் சான்று. அதில் எங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கான சான்று மற்றும் அவரால் எங்கள் தொழிற்சாலை விரிவுபடுத்த வழங்கப்பட்ட குறிப்பு.
5.உ.மு.எண்.123/2022, நாள்:31.03.2022 மேற்படி சட்டத்தின் 7-வது பிரிவிற்கான அறிவிப்பு.
6.02.04.2022-ல் எங்களால் வட்டாட்சியரிடம் சமர்ப்பிக்கப்பட்ட காரண, காரிய விளக்கத்துடனான முறையீடு.

- - -

**M/s.லங்கா டிரேடிங் பிரைவேட் லிமிடெட், (முன்பு அக்காய் ஆட்டோ ஸ்பிரிங் பிரைவேட் லிமிடெட்)** எண்.106, G.N.T.ரோடு, அத்திப்பேடு கிராமம், அத்திப்பேடு அஞ்சல், ஜெகநாதபுரம்-2, சோழவரம் குறுவட்டம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் சார்பாக அதன் இயக்குநர் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் காரண, காரிய விளக்க மேல்முறையீடு யாதெனில்:-

2. மேற்படி முறையீட்டாளரான நான் வணக்கமாய் சமர்ப்பிக்கும் மேல்முறையீடு என்னவென்றால், நான் கடந்த 09.05.2025 அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் குறுவட்டம், சோழவரம் வருவாய் ஆய்வாளர் அவர்களால் 06.05.2025 தேதியிட்ட தமிழ்நாடு 1905-ஆம் ஆண்டின் 3-வது சட்டத்தைச் சேர்ந்த 7-வது பிரிவின்படிக்கான அறிவிப்பு கிடைக்க பெற்றோம். பின்பு தற்போது 14.08.2025 –ல் பார்வை 1ல் கண்ட கடிதத்தின்படி வட்டாட்சியர் அவர்கள் ஒரு தவறான உத்தரவினை செயல்முறை நடவடிக்கை மூலம் எங்கள் முறையீட்டினை எங்களிடம் எந்தவித வாக்குமூலமும் பெறாமல், தீர விசாரிக்காமல் நாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலனைக்கு உட்படுத்தாமல், உத்தரவினை பிறப்பித்துள்ளார். அவ்வுத்தரவினை எதிர்த்து, மேற்படி சட்டமானது கிராம நத்த வகைப்பாட்டுக்கு உட்பட்டு வராமல் இருக்கின்ற பட்சத்திலும், எங்களது எவ்வித நடவடிக்கைக்கும் குந்தகம் வராத வகையில் சமர்ப்பிக்கப்படும் மேல்முறையீடினை கீழ்காணும் எங்களது கோரிக்கை மற்றும் Grounds of Appeal ஆகியவைகளை பரிசீலனை செய்து, உடனடியாக பொன்னேரி வட்டாட்சியரின் செயல்முறை நடவடிக்கை உத்தரவினை உடனடியாக நிறுத்துமாறும் பணிவுடன் சமர்ப்பித்து வேண்டிக்கொள்கிறோம்.

For LANKA TRADING PRIVATE LIMITED
(Formerly known as AKKAI AUTO SPRING PRIVATE LIMITED)



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



42

{ 3 }

3. மேற்படி அறிவிப்பில் நாங்கள் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஜெகநாதபுரம்-2 கிராமத்தில், தற்போதைய புல எண்.477/1 வகைப்பாடு கிராம நத்தம், சர்க்கார் புறம்போக்கு முழு விஸ்தீரணம் சதுர மீட்டரில் 0.52.83 என்ற முழு விஸ்தீரணமும் கட்டிடம் மற்றும் காம்பவுண்ட் அமைத்த கம்பெனி முழுவதையும் அனுபவத்தில் இருப்பதாக கட்டம் போட்ட அட்டவணையில் குறிப்பிட்டு, சார்வு செய்யப்பட்டது.

4. மேற்படி சார் ஆய்வாளர் அறிவிப்புக்கு முன்பு மேற்படி கிராம தலைவர் R.ரமேஷ் அவர்களின் 14.03.2022-ந் தேதியிட்ட கடிதத்தில் மேற்படி கிராம சர்வே எண்.477/1-ல் ஏக்கர் 1.43 செண்ட் நிலம் ஊராட்சிக்கு சொந்தமான கிராம நத்தம் என்றும், அதற்கான ஆவணங்களை மன்றத்தில் அளிக்குமாறு ஒரு அறிவிப்பினை எனக்கு 28.03.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், மேற்படி புல எண் அடிப்படையிலேயே தவறானதாகும். ஏனென்றால், நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பே புல எண்.117 என்கிற எண்ணுக்கு உட்பட்டதாகும்.

5. மேற்படி அத்திப்பட்டு கிராமத்தில், பல்வேறுபட்ட நபர்கள் வசித்து வந்தனர். அவர்களில் குறிப்பாக எங்களுக்கு ஆவணங்களின் வாயிலாக நடேச முதலியார், சிதம்பர முதலியார், சின்ன செல்லய்ய நாயுடு, குள்ளப்ப முதலி, முனுசாமி முதலி, கண்ணம்மாள், லட்சுமியம்மாள், மணி தேவர், ஜெயராம நாயுடு, கிஷ்டப்ப நாயக்கர் மனைவி கண்ணம்மாள், பாப்பம்மாள், நாகரத்தினம் செட்டியார், தணிகாச்சல முதலி, எத்திராஜம்மாள் போன்றோர் ஆக்கரணம் செய்யப்பட்டு, இவர்களில் கண்ணப்ப நாயக்கர் பாரியாள் ஜகதாம்பாள் என்பவர் 12.07.1961 தேதியில் ரூ.22,000/-த்திற்கு மேற்படி அழிஞ்சிவாக்கம் மதுரா ஜனப்பன்சத்திரத்தைச் சார்ந்த கம்மவார் குலம், சிவமதம் பயிர்ஜீவனம் கொரப்பாடி பெருமாள் நாயுடு குமாரர் கொ.ரத்தினம் நாயுடு அவர்களால் சர்ச்சைக்குரிய கிராம நத்தம் சர்வே எண்.477/1 என்பது முன்பு அதாவது 1960-ல் A ரிஜிஸ்தர் ஆரம்பத்திற்கு முன்பே சர்வே எண்.117 ல் பூரா விஸ்தீரணம் ஏக்கர் 12.93 செண்ட் ஆகும்.

இதில் ஜகதாம்பாள் வகையறாக்கள் அனுபவத்தில் இருந்து ஏக்கர் 11.45 செண்ட் நிலம் அவ்வாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செக்பந்திக்குள் அடங்கிய நிலத்தைச் சார்ந்த சர்வே எண்.118/3, 128/2, 129/1, 2, 131/6, 130/2 இவைகளுக்கு பழைய பைமாஷ் எண்.180A, 180B1, 180B2, 181, 187B, 200A1, 200B, 201A, 203, 204, 235A, 200A2, 201B, 202A, 178, 185, 205, 204

For LANKA TRADING PRIVATE LIMITED
Formerly Known as
AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

A3

{4}

ஆகியவைகளில் அடங்கிய மேற்படி ஏக்கர் 11.45 செண்ட் விவசாய நிலங்களில்
மின்சார மோட்டார், துரவு, 7.5 HP, கிர்லாஷ்கர் மின்சார மோட்டர் 400/440 Ams 10
உள்ள பம்பு செட்டுடன் இணைந்த கிராம நத்தம் சர்வே ண்.117-ல் அடங்கிய ஏக்கர்
0.33 செண்ட் மேற்படி ஜகதாம்பாள் அவர்களின் பூர்வீக சொத்தாகும். அதில் மாட்டுத்
தொழுவம், தளம்போட்ட வீடு, வீட்டு காம்பவுண்ட், செங்கல் கட்டிட துரவு உள்பட
மேற்படி ஜகதாம்பாள் அவர்களின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்து,
பல்வேறுபட்ட வென்னிலைக்கடன்களை தீர்க்கும் பொருட்டு, ரூபாய்.22,000/-த்திற்கு
ரத்தினம் நாயுடு அவர்களுக்கு விற்பனை செய்து, அதனை பொன்னேரி சார்பதிவு
அலுவலகத்தில், புத்தகம்-1, வால்யும் 743, பக்கம் 408 முதல் 412 வரையிலன
பக்கங்களில், 1961-ஆம் ஆண்டின் 2474 —வது தஸ்தாவேஜாக பதிவு செய்யப்பட்ட
ஒரு கிரையப் பத்திரத்தின் முன்னிலைக்கு கிரையம்பெறப்பட்டு, ஆக அதுமுதல்
மேற்சொன்ன கொரப்படி ரத்தினம் நாயுடு அவர்களின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும்
இருந்து வரப்பட்டு, மேற்படி ரத்தினம் நாயுடு அவர்களிடமிருந்து மேற்படி அறிவிப்பில்
கொடுக்கப்பட்ட நிலத்துடன் அவர்களின் பூரா நிலங்களையும் 16.07.1990-ல் எங்கள்
நிறுவனத்தின் சார்பாக அப்போதைய சென்னை அக்காய் ஆட்டோ ஸ்பிரிங்
நிறுவனத்தின் பேரில் கிரையம் பெறப்பட்டு, அதனை பொன்னேரி சார்பதிவாளர்
அலுவலகத்தில், புத்தகம்-1, வால்யும் 1705-ல் பக்கம் 215 –ல் ஆவண
எண்.2981/1990படிக்கு கிரையம் பெறப்பட்டு, அதுமுதல் எங்கள் நிறுவனத்தின்
சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வரப்படும் சொத்தாகும். இதேப் போன்று
மேற்படி கிராமத்தில் அடங்கிய பழைய சர்வே எண்.117 ல் சின்னய்யன்
அவர்களிடமிருந்து ஒரு ஏக்கர் 0.12 செண்டும், முகம்மது இஸ்மாயில்
அவர்களிடமிருந்து ஏக்கர் 0.40 செண்டும், மற்றும் இன்னும்பிற பின்வரும்
விளக்கத்துடன் கூடிய நபர்களிடமிருந்து கிரையம் பெறப்பட்டு, அதில் செடிகள் மற்றும்
நிர்வாகத்திற்கு தேவையான கட்டிடம் மற்றும் தளவாடங்கள் அமைக்க வேண்டி,
தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் பிரிவு 159, 160, 161 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்து
கட்டிட விதிகள் 1970 படி நிபந்தனைகுட்பட்ட கட்டிட அமைப்பினை சோழவரம்
பஞ்சாயத்து யூனியனிடம் அதன் நடவடிக்கை Disk No.338/08/A3,
Dated:11.11.2008படிக்கு கட்டிட வரைபட அனுமதி பெற்று, மேற்படி கட்டிடத்தினை
சென்னையைச் சேர்ந்த கட்டிட பொறியாளர் மூலம் கட்டப்பட்டு, இதுவரை அரசுக்கு
உரிய வரி வகையறாக்களை செலுத்தி, ஆண்டு அனுபவித்து வரும் சொத்து என்பதால்,
இதனை அப்புறப்படுத்துவது மற்றும் சர்வே எண்ணை மாற்றி எவ்வகையிலேனும்

FOR LA KA TRADING PRIVATE LIMITED
AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



44

35



அப்புறப்படுத்த வேண்டும் என பல்வேறு நபர்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளை ஏற்க வேண்டாமென மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். மேலும், பல்வேறுபட்ட பொது மக்களிடமிருந்துதான் அறிவிப்பில் கண்ட சொத்தும், அதனை ஒட்டியுள்ள கம்பெனி/நிறுவனம் அமைக்கப்பட்டுள்ள முன்பு அக்காய் ஆட்டோ ஸ்பிரிங் தற்போது லங்கா டிரேடிங் பிரைவேட் லிமிடெட் அமைந்துள்ள ஏக்கர் 8.59 செண்ட் நிலங்கள் அதன் பட்டா எண்.7, 3387, 3388 உடன் இணைந்த மறுபயனுடன் கிரையம்பெற்று, இன்றளவும் அங்குள்ள பொதுமக்கள் வேலை செய்து பயன்பெற்று வருகின்றனர். ஆகவே அதனை சர்க்கார் புறம்போக்கு என்றும், மிகுதியான கிராம நத்தம் என்றும் வகைப்படுத்தி, அப்புறப்படுத்த நினைப்பது சட்டத்திற்கும், நியாத்திற்கும் புறம்பானதாகும் என கடுமையுடன் ஆட்சேபனையுடன் அதற்கான விளக்கம் பின்வருமாறு:-

**<u>பொருள் விளக்கம்:-</u>**

அ) மேற்படி அத்திப்பேடு கிராமத்தில் வசித்து வந்த பொது மக்கள் அவர்களின் பழைய புல எண்.117 ஆகும். இது தற்போது புதிய புல எண்.477 ஆகும்.

ஆ) எங்களது நிறுவனம் 1982-க்கு முன்பு நிறுவனச் சட்டம் பிரகாரம் அக்காய் ஆட்டோ ஸ்பிரிங் பிரைவேட் லிமிடெட் என்கிற ஒரு தொழிற்சாலையினை நிறுவி, அதன் மூலம் 1982 முதல் இயங்கி வந்து, மேற்படி கிராமத்தைச் சார்ந்த பல்வேறுபட்ட நபர்கள் தொழிற்சாலையில் பணி அமர்த்தப்பட்டு, இன்றளவும் இயங்கி வருகிறது. அவ்வாறு இயங்கி வரும் நிறுவனம் 04.08.2000-த்தில் லங்கா டிரேடிங் பிரைவேட் லிமிடெட் என வணிக நிறுவன சட்ட விதிகளுக்குட்பட்டு இயங்கி வருகிறது.

இ) மேற்படி எங்களது நிறுவனத்தின் மூலம் அதாவது அத்திப்பேடு கிராமத்தைச் சேர்ந்த ஒரு சின்னைய்யன் என்பவர் கிராம நத்த வகைப்பாட்டில் வசித்து வந்து, பட்டா அவர் மீது இருந்து, அரசு அங்கீகரிக்கப்பட்டு இருந்த நிலத்தின் பரப்பு 0.12 செண்ட் அதனை எங்கள் நிறுவனம் 26.09.1988-ந் தேதியில் ஆவண எண்.3610/1988-ன்படிக்கு மறுபயன் கொடுத்து கிரையம் பெறப்பட்டு, பொன்னேரி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டபோது, கிராம நத்தத்தின் புல எண்.117 ஆகும்.

FOR LANKA TRADING PRIVATE LIMITED
formerly known as
AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



45

36

{ 6 }

ஈ) அதைப்போலவே மேற்படி கிராமத்தைச் சேர்ந்த இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த முகமது இஸ்மாயில் அன்வர் என்பவர் மேற்படி கிராமத்தில் நிரந்தரமாய் வசித்து வந்து, அவரது உடைமையினை அரசு பதிவில் அங்கீகரிக்கப்பட்டு இருந்த மேற்படி பழைய கிராம நத்த புல எண்.117-ல் எங்கள் நிறுவனம் ஏக்கர் 0.41½ செண்ட் நிலத்தினை ஆவண எண்.3613/1988-ன்படிக்கு கிரையம் பெற்று, இன்றளவும் எங்கள் நிறுவனத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வரும் சொத்தாகும்.

உ) அதைப்போலவே, அதே கிராமத்தைச் சேர்ந்த மேலே முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ரத்தினம் நாயுடு என்பவர் தன் குடும்பத்துடன் பலகாலமாய் வசித்து வந்தமையால், அவரும், அவரது மிகப்பெரிய குடும்ப உறுப்பினர்களும் அனுபவித்து வந்த கிராம நத்த நிலத்தின் பரப்பளவு முறையே ஏக்கர் 0.18, 0.45 செண்ட் ஆகும். இதனை எங்கள் நிறுவனம் கடந்த 12.07.1990-ல் மறுபயன் கொடுத்து, கிரைய ஆவண எண்.2981/1990-ன்படிக்கும், மற்றும் ஏக்கர் 0.45 செண்ட் நிலத்தினை 25.07.1990-ந் தேதியில் மறு பயன் கொடுத்து, கிரைய ஆவண எண்.3189/1990-ன் படிக்கும் கிரையம் பெற்று, ஆகக் கூடிய பூரா விஸ்தீரணம் ஏக்கர் 1.16 ½ செண்ட் நிலத்தினை எங்களுடைய தனிப்பட்டா சுவாதீனத்திலும், அனுபவத்திலும் கட்டிட அமைப்பின் வாயிலாகவும், சுற்றுச்சுவர் அமைப்பின் வாயிலாகவும், எங்களின் சுவாதீனத்தில் உள்ளது.

ஊ) மேலும், மேற்படி முறையான தேதிகளிலிருந்து இன்று வரை சுமார் 35 ஆண்டுகள் ( 3 Decades ) கடந்தும், காலவரையறைச் சட்டம் எனும் நீடானுபோக உரிமையின் வாயிலாகவும் மற்றும் வசதி உரிமைச் சட்டம் வாயிலாகவும் எங்களின் தனிப்பட்ட உரிமையானது மன்று சுட்டிய உரிமையாகும்.

இதில் பிறர் எவரும் அத்துமீறி நுழையவோ, ஆக்கிரமிக்கவோ, ஆக்கிரமிக்க நினைக்கவோ மேலான சட்டம் எங்களுக்கு வலுவான நிலையில் உள்ளதாலும், மேற்படி கிராம பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க வருவாய்த்துறையின் மூலம் வருவாய் ஆய்வாளருடைய 7-வது பிரிவிற்கான அறிவிப்பிற்கும் அப்பாற்பட்ட உரிமை உள்ளது என எடுத்துரைக்கிறோம்.

For LANKA TRADING PRIVATE LIMITED
Formerly Known as
...KAI AUTO SPRINGS PRIVATE LIMITED



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

{7}

எ) மேலும், அவ்வாறு நாங்கள் அனுபவிக்கின்ற காலத்தில், சில மூன்றாம் நபர்கள் அத்துமீறி நுழையவும், எங்கள் சுவாதீனத்தில் தலையிடவும் முயற்சி செய்தனர். அவர்களை யார், யார்கள் என்று கேட்டபோது, கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியதால், அவர்கள் உள்பட மேற்படி அத்திப்பேடு கிராமத்திற்கு எதிராக எங்களது நிறுவனம் எங்களது உரிமையை நிலை நாட்ட குந்தகம் விளைவிக்காத வகையில் பரிகாரம் கோரி, அப்பரிகாரத்தில் மேற்படி சோழவரம் ஒன்றிய அத்திப்பேடு கிராமத்தார்கள் அனைவர்களுக்கும் எதிராக ஒரு பிரதிநிதித்துவ (Representative Suit) வழக்கில் நிரந்தர உருத்துக்கட்டளை கேட்டு, அதன்படி அவ்வழக்கினை மாண்புமிகு பொன்னேரி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில், அசல் வழக்கு எண்.226/2001 என ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கு விவரங்களை முறையாக சார்வு செய்ய உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரகாரம் வட்டார வழக்கில் உள்ள ஒரு செய்தித்தாளில் அதாவது தினமலர் பத்திரிகையில், பக்கம் 11-ல் கடந்த 09.01.2002-ல் பிரசுரமாகி, அதன் முன்னிலைக்கும் கிராமத்தார்கள் அனைவருக்கும் தண்டோரா மூலம் சார்வு செய்யப்பட்டு, பின்பு முறையாக வழக்கு நடத்தி, அவ்வழக்கும் கடந்த 12.02.2002-ல் எங்கள் நிறுவனம் சார்பாக தீர்ப்பாகி, அதுமுதலும் கடந்த 20 ஆண்டுகளாக பிறர் எவர் தடை இடையூறின்றி, அரசுக்கு முறையே கப்பம், வரி, வாய்தாக்களை செலுத்தியும், கட்டிட அமைப்புக்கான முறையான அனுமதியை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பெற்றும், எங்களது முழுமையான சுவாதீன அனுபவத்தில் உள்ளதினை இன்று ஏனோ சில சமூக விரோத செயல்களில் ஈடுபட நினைக்கும் நபர்களின் தூண்டுதலால் மீண்டும் இத்தகைய ஒரு விசாரிப்பினை ஏற்படுத்தி அமைப்பதற்கு எங்கள் நிறுவனம் மிகவும் வருத்தப்படுகிறது. மீண்டும், மீண்டும் நிலைநாட்ட ஒவ்வொரு ஆண்டும் இத்தகைய முயற்சியில் அத்தகைய நபர்கள் ஈடுபடுகின்றனர் என்பதற்கு சான்றாக கடந்த 2008-ஆம் ஆண்டிலும், அத்தகைய முயற்சி எடுக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

For LA KA TRADING PRIVATE LIMITED
Formerly Known as
AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED

Director



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



47

{ 8 }

ஏ) மாட்சிமை பொருந்திய தமிழகத்தின் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் திருவாளர். A.K.கங்குலி மற்றும் சமுதாய புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு. நீதியரசர் திருவாளர்.K.சந்துரு அவர்களிடம் மேற்படி அத்திப்பேடு கிராமத்தைச் சேர்ந்த M.M.பிரகாஷ் மற்றும் M.கண்ணன் ஆகியோர்கள் எங்கள் நிறுவனத்தின் உடைமை மற்றும் உரிமையுள்ள நிலப்பரப்பு சொத்திற்கு எதிராகவும், நிறுவனச் சொத்திற்கு எதிராகவும், அப்புறப்படுத்த வேண்டி ஒரு பேராணை வேண்டி தாக்கல் செய்தனர். அப்பேராணை எண்.29081/2008 ஆகும். அதில் கிராம நத்த வகைப்பாடு தற்போது செயல்முறைப்படுத்தும் ஆக்ட் 1905-க்கு உட்பட்டதல்ல எனவும் தெளிவாக விளக்கமளித்து, எங்களுக்கு சாதகமாக உத்தரவு வரப்பெற்ற பின்பும், அதனை வட்டாட்சியருக்கு நன்கு தெரிந்திருந்தும், அதே சட்ட வகையங்களுக்கு உட்பட்டு, மீண்டும், மீண்டும் பல்வேறு பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் அவ்வப்போது காளாண்கள் போல முளைக்கின்ற நபர்களின் புகார் மற்றும் மனு பேரில் வட்டாட்சியர் தீவிரமாக ஆராயாமல், ஒரு மோசமான உத்தரவினை வழங்கியுள்ளார். அவ்வுத்தரவினை உடனே ரத்து செய்ய உடனே தாங்கள் எங்களது கோரிக்கையினை பரிசீலனை செய்து, விசாரித்து, எங்கள் நிறுவனத்திற்கு தகுந்த பாதுகாப்பினை மேற்படி அச்சுறுத்தும் நபர்களிடமிருந்து பாதுகாக்க உத்தரவு வழங்குமாறும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

ஐ) அத்தகைய பேராணையானது, அவ்வாண்டே 10.12.2008-ல் ஹெக்டேர் 5.23.6 ஏர்ஸ் பரப்பளவு உள்ள நிலத்தில் எங்கள் நிறுவனமானது ஏக்கர் 1.32 செண்ட் நிலத்தில் உடைமை மற்றும் அனுபவத்தில் இருப்பதை ஆவணங்களின் வாயிலாக தெரியவந்தமையால், அத்தகைய நிலம் குறித்து 1905-ஆம் ஆண்டு சட்டம் மற்றும் பிரிவுகள் அதற்கு ஏற்புடையது அல்ல என எங்களுக்கு எங்களின் நியாமான உரிமை குறித்து தீர்ப்பளித்துவிட்டது. அதுகுறித்து மேற்படி பேராணை வேண்டியவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு இதுவரை செல்லவில்லை. எனவே அத்தகைய நம் தமிழக சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணையின் தீர்ப்பே இறுதியானதால், இது குறித்து மேற்படி சட்டத்தை மீண்டும் பயன்படுத்த வேண்டாம் என மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடன், அன்புடன் எங்கள் காரண, காரிய விளக்கத்தினை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED

Director



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



48

{9}

இதுகுறித்து மேற்கூறிய காரண, காரியத்திற்கான ஆவண நகல்களை இதனுடன் சமர்ப்பித்துள்ளோம். அதனை மாண்புமிகு. மாவட்ட ஆட்சியரும், நிர்வாக நடுவருமான தாங்கள் விசாரித்து, ஆராய்ந்து, எங்களை மேல்முறையீட்டினை ஏற்று பார்வை 1ல் கண்டுள்ள வட்டாட்சியரின் தவறான உத்தரவினை (Impugned Order) உடனடியாக தள்ளுபடி செய்து அல்லது விசாரணை முடியும் வரை இடைக்காலமாய நிறுத்தி வைத்து, எங்களது மேல்முறையீட்டினை முடிவாக அனுமதிக்குமாறு மிகுந்த தாழ்மையுடனும், பணிவன்புடனும் வேண்டி மாண்புமிகு நிர்வாக நடுவருமான மாவட்ட ஆட்சியரை பிராத்திக்கின்றோம்.

**M/s.லங்கா டிரேடிங் பிரைவேட் லிமிடெட்,**
**(முன்பு அக்காய் ஆட்டோ ஸ்பிரிங் பிரைவேட் லிமிடெட்)**

LANKA TRADING PRIVATE LIMITED
CHENNAI 600 067

For LANKA TRADING PRIVATE LIMITED
AKKAI AUTO SPRINGS PRIVATE LIMITED
இயக்குநர்
Director

6. In the light of the appeal, we add District Collector, Thiruvallur as R2 and Mr.T.K.Saravanan, learned Additional Government Pleader, accepts notice for R2 also. We make it clear that R2, who is the appellate authority, shall take up the aforereferred appeal as well as stay petition and deal with the same on its own merits and in accordance with law. We are adopting this course as 30 days from the date of service of impugned order on the writ petitioner has not elapsed as of today.

7. Coercive action (if any and if that be so) will be subject to and



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



depending on the orders in the stay petition and/or main appeal whichever is earlier. This douses the anxiety of the writ petitioner as regards captioned 'Writ Miscellaneous Petition' (hereinafter 'WMP' for the sake of brevity).

8. Captioned WP is disposed of as closed with the aforementioned observations. In the light of what we have written regarding coercive action (if any and if that be so), captioned WMP thereat has become otiose and the same is disposed of as closed. There shall be no order as to costs.

**(M.S.,J.)** **(M.S.K.,J.)**
04.09.2025

Index : Yes / No
Neutral Citation : Yes / No
mmi

To

1.The Tahsildar,
Office of the Tahsildar,
Ponneri, Thiruvallur District.

2.The District Collector,
Thiruvallur District.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**M.SUNDAR, J.,**
**and**
**MUMMINENI SUDHEER KUMAR, J.,**

mmi

**W.P.No.33576 of 2025**

**04.09.2025**



https://www.mhc.tn.gov.in/judis